**அசல் வழக்கு எண். 22/2020 தேதி-15.07.2025**

**பி.வா.சா.2 - பாலமுருகன்**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. எனது தந்தை வாங்கிய சொத்தில் பேக்கரி வைத்துள்ளேனா என்றால வைத்துள்ளேன். மேற்படி பேக்கரி கடை புதிததாக கட்டப்பட்ட கடையா என்றால் சரிதான். புதிதாக கட்டப்பட்ட கடையை தான் தற்போது வாடகைக்கு விட்டுள்ளேன். மேற்படி கட்டிடம் எப்போது கட்டப்பட்டது என்றால் சுமார் 2016 ம் வருடம் இருக்கும். மேற்படி கட்டிடம் கட்டிய பின்பு 2017 ம் வருடம் நான் வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் வாதி என் மீது இவ்வழக்கை தாக்கல் செய்த பின்னிட்டு தான் அசல் வழக்கு எண் 228/2017 என்ற வழக்கை எனது தந்தை வாதிக்கு எதிராக தாக்கல் செய்தார். மேற்படி வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் எங்களது இடத்தை அளந்து தவறாக எங்கள் இடத்தில் வாதி கல் ஊன்றியதால் மேற்படி வழக்கு வாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டது.

2. நான் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.228/2017 ல் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு தாவா சொத்தை அளந்தார்களா என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி பேக்கரியை ஒட்டி உள்ள கிழக்கே போகும் சந்தின் சர்வே எண் வேறு என்றால் சரிதான். மேற்படி சந்தின் தென்புறத்தில் முக்கோண வடிவில் நான் ஒரு கட்டிடம் கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். இந்த வழக்கின் பரிகாரம் என்ன என்றால் வாதியின் நிலத்தை நாங்கள் ஆக்கிரமித்து அனுபவம் செய்து வருவதாக எனது தந்தை மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி பேக்கரி உள்ள இடத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் சரியாக நியாபகம் இல்லை. தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண்.706/9 மற்றும் 706/10 ஆகும்.

3. சர்வே எண்.706/9 மற்றும் 706/10 ல் தாவா வரைபடத்தில் AD1 என்று குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ள முக்கோண வடிவில் உள்ள இடத்தை நானும், எனது தந்தையும் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக கூறி வாதி எங்கள் மீது சுவாதீனம் ஒப்படைக்க கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.228/2017 ல் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் இவ்வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நானும்

எனது தந்தையும் தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டியுள்ளோம் என்றும், மேற்படி கட்டிடத்தை இடித்து சுவாதீனத்தை வாதியிடம் ஒப்படைக்க சட்டப்படி நாங்கள் கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.யுகாதிமரியா

**Additional District Munsif,**
**Kulithalai.**